DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.338 /2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.ரோஜா |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.ரமேஷ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A 1 to A4 absent. u/s 355 BNSS petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 04.02.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருச்சியில் ஜெராக்ஸ் கடை ஒன்றில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 15.11.2013 தேதி குன்றக்குடியில்உள்ள முருகன்கோவிலில் வைத்து வழக்கின் எதிரி ரமேஷ்ராஜா என்பவருக்கும் பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. அதற்கு முன்னர் 2012 வருடம் எனது அம்மாவின் உடன்பிறந்த அண்ணனின் மகன் சங்கர் என்பவருடன் திருமணம் நடத்தி வைத்தார்கள். அவர் என்னை விட 25 வருடங்கள் வயது மூப்பு என்பது எனக்கு

கல்யாணத்திற்கு பிறகு தெரியவந்ததால் அந்த திருமணம் பிடிக்காமல் நான் அரளி விதையை அரைத்து குடித்து மருத்துவனையில் சேர்க்கப்பட்டு அதிர்ஷ்டவசமாக உயிர்பிழைத்தேன்.

2. அதன்பிறகு அந்த திருமணத்தை பெரியோர்கள் முன்னிலையில் பேசி தீர்த்து பத்திரத்தில் சுமுகமாக பிரிந்து கொள்வதாக எழுதி கொண்டோம் இந்த விவரம் தெரிந்துதான் என்னை 2 வதாக எதிரி ரமேஷ்ராஜா 2013 வருடம் திருமணம்செய்து கொண்டார். திருமணம் செய்யும்போது எனக்கு 2 வது திருமணம் என்றும் எனது கணவருக்கு முதல் திருமணம் என்று சொல்லிதான் கல்யாணம்செய்து கொண்டோம்.ஆனால் எனக்கு அவருடன் திருமணம் ஆகி 7 வருடத்திற்கு பின்பு எதிரி ரமேஷ்ராஜாவுக்கு ஏற்கனவே திருமணமாகி அவர்களுக்கு ஒரு மகனும் மகளும் உள்ளதாக தெரிந்துகொண்டேன்.அவருடைய அந்த மனைவியின் பெயர் ஷீலாராணி ஆகும்.

3.திருமணம் நடக்கும்போது எதிரி ரமேஷ்ராஜா சென்னையில் வேலை பார்த்தார். நான் எனது சொந்த ஊரான அரசுரில் இருந்தேன்.அவர் அவ்வப்போது 2,3 மாதங்களுக்கு ஒருமுறை என்னை வந்து பார்த்து செல்வார்.எனக்கும் எனது கணவர் ரமேஷ்ராஜாவுக்கும் 05.08.2014 வருட ம் ஒரு ஆண் குழந்தை பிறந்தது அவருக்கு தற்போது 12 வயதாகிறது. சென்னையில் எனது கணவர் இருந்து அரசுருக்கு வரும்போது எனக்கு திருமணத்தின்போது போட்ட 40 சவரன் நகையை மொத்தமாக எடுத்து சென்று Call taxi தொழில்செய்வதற்காக தேவைப்படுவதாக எடுத்துசென்று மொத்தமாக விற்றுவிட்டார். அது பற்றி எங்கள் ஊரில் நகை ஏன் விற்றீர்கள் என குடும்பத்தார் கேட்டதால் அது எங்கள் இருவருக்குள் பிரச்சனையை கொண்டு வந்தது, ஒரு முறை என்னை பார்க்க என் கணவர் அரசுருகககு வந்தபோது அவருடன் அவரது அக்கா பாப்பாத்தியும் வந்திருந்தார்.என்னிடம் அவருப்கு அதிமாக கடன் ஆகிவிட்டதாகவும் உடனே என் வீட்டிலிருநது 5,00,000 பணம் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும அவருக்கு இருசக்கர வாகனம் வேண்டும் எ்ன்றும்கேட்டு என்னை துன்புறுத்தி வந்தார். வீட்டில் இருக்கும்போது எதற்கு எடுத்தாலும் எதையாவது சொல்லி வம்பு இழுத்து அவரது அக்கா என்னை கெட்ட வார்த்தையால்

அசிங்கமாக பேசியுள்ளார். அதில் அவர்கள் இருவரும் சேர்ந்து அடித்தார்கள். அப்போது எனது மாமனாரும் மாமியாரும் உடன் இருந்தார்கள். அவர்கள் எனது கணவரையோ அவரது அக்காவையோ தடுக்கவில்லை அவர்கள் என்னை அடித்ததில் எனது ஆடைகள் எல்லாம் கிழிச்து நான் காவல்நிலையம் செல்லும்போது கிழிச்த ஆடையுடன் சென்றேன்., எனது மாமியார் ஒரு பெண்ணுக்கு செய்யவேண்டிய அடிப்படை கடமை செய்யவில்லை. நான் உடனே காவ்லநிலையம் கிளம்பி புகார் அளிக்க சென்றேன். தேதி மாதம் நினைவில் இல்லை 2020 வருடம் என்னை அடித்ததற்காக நான் காவல்நிலையம்சென்று புகார் அளித்தேன். அந்த புகாருக்கு மனு ரசீது வழங்கப்பட்டது. நான் அதறகான நகலை பெற்றுகொண்டேன். மனு ரசீதில் நகலை பெற்று கொண்டதற்கான கையெழுத்து என்னுடையதுதான். அந்த மனுரசீது அ.சா.ஆ.,1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை போலிசார் காவல் நிலையத்திற்கு வரவழைத்து விசாரித்தார்கள்.

(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.